மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: பெரம்பலூரில் உருவான கோட்டம் திருச்சியில் இருந்தது. அதை பெரும்பலூர் மக்கள் பெரும்பலூரில் வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அந்த மாற்றத்தைத்தான் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாற்றம் இதில் இல்லை.

குமரி மாவட்டத்தில் நிலவிடும் குறைந்த அளவு மின் அழுத்தம்

*வினா எண் 42—திரு. டி. மணி; மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரிமாவட்டத்தில் குமரி முனையிலிருந்து அந்த மாவட்டத்தின் கடைசி பகுதியான நீரோடி வரையிலும் மின் விளக்குகளின் வெளிச்சம் மங்கலாக எரிவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி அதிகமாக வெளிச்சம் கிடைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) குமரி மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் வெளிச்சம் மங்கலாக எரியவில்லை. ஒரு சில கிராமங்களில் மட்டுமே அங்கு நிலவும் மின் அழுத்த குறைவினால் இந்த நிலை இருக்கிறது.

(ஆ) இக்குறை நிவர்த்திக்க நாகர்கோவிலிலும் தக்கலையிலும் உள்ள 66 கே. வி. உபமின் நிலையங்களை ரூ. 82 இலட்சம் செலவில் 110 கே. வி. உபமின் நிலையங்களாக உயர்த்தவும், மேலும் குழித்துறையில் ரூ. 1.7 இலட்சம் செலவில் ஒரு 66 கே. வி. தொடு உபமின் நிலையம் (Line TAP-Sub-station) அமைப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மணி: விளவங்கோடு தாலுகாவில் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் பெருவாரியாக இந்த மின் விளக்குகள் மிகவும் மங்கலாக, இரவு காலங்களில் மாணவர்களுக்கு படிக்கக் கூட வசதி இல்லாத அளவில் இரண்டு மூன்று ஆண்டுகளாக நிலைமை நிலவி வருகிறது. அதை மாற்றுவதற்கு அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் 83 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் துணை மின் நிலையங்களை அமைக்கவேண்டும் என்ற வேலைகள கும். நாகர்கோவில் துணை மின் நிலையம் டிசம்பர் 1981-ல் முடியும். தக்கலை துணைமின் நிலையம் மே 1982-ல் துவங்கப்பட்டு பத்து மாதங்களில் முடியும். இந்த இரண்டு துணை மின் நிலையங்களும் வந்த பிறகு நிச்சயமாக நிலைமை முன்னேறும். அதோடு மட்டுமல்ல. இப்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்கிற காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓரளவு நிலைமை நன்றாக உள்ளது.

1981 ஆகஸ்ட் 25

திரு. டி. மணி: இப்போது விளவங்கோடு தாலுகாவில் குறிப்பாக லைன்-டாப் ஸ்டேஷன் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள் அது எப்போது ஆரம்பிக்கப்படும்? நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொண்டாகிவிட்டனவா?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: நிலம் கையகப்படுத்துவதற்கான கேட்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நீலகிரியில் தேயிலை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளிடமிருந்து அரசே கொள்முதல் செய்யும் திட்டம்

* வினா எண் 43— திரு. செ. சிவசாமி மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் சீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

நீலகிரியில் தேயிலை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளை காப்பாற்றும் முறையில் சிறு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்கள் பயிர் செய்யும் டீ இலையை சர்க்காரே வாங்கிக் கொள்ளும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளே சிறு விவசாயிகளிடமிருந்து இலையை வாங்கி தேயிலை உற்பத்தி செய்வதால், இதை அரசு வாங்கிக் கொள்ளும் உத்தேசம் இல்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சாதாரண சிறு விவசாயிகள் தேயிலையை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுடைய உற்பத்திப் பொருளை விற்பதற்குப் போதுமான மார்க்கெட் இல்லாத காரணத்தினால் அங்கிருக்கக்கூடிய வசதியுள்ளவர்கள் அதைச் சீப்பாக வாங்கி அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த நிலைமையை மாற்ற, அவர்களைக் காப்பாற்றும் முறையில் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க, கட்டுப்படியாகும் விலை கிடைக்கும் முறையிலே, அரசே நேரடியாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்தால் அந்த விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்கும். அந்த முறையிலே அரசாங்கம் முன்முயற்சி எடுத்துக்கொண்டு அப்படி வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தற்போது 20,000 ஏக்கர் பரப்பில் தேயிலை உற்பத்தி செய்யும் 10,000 சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களது நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் நிறைவேற்றுவதற்கு தற்போது நீலகிரி மாவட்டத்தில் 12 தேயிலை தொழிற் கூட்டுறவு தொழி